# நாளிதழ் வெளியீடு

## சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியார்டு நுழைவுத்தேர்வு 16 ஜனவரி 2016 -இல் நடைபெறவிருக்கிறது - துணைவேந்தர் தகவல்

சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியார்டு ஆனது இந்திய புவி அறிவியல் கூட்டமைப்பு (Geological Society of India) மற்றும் புவி அறிவியல் அமைச்சகத்தின் உதவியுடன் நடத்தும் போட்டித் தேர்வாகும். இந்தியாவில் 75 தேர்வு மையங்களில் ஒன்றான பெரியார் பல்கலைக்கழகத்தில் **16 ஜனவரி 2016** அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது. புவி அறிவியல் ஒலிம்பியார்டு நுழைவுத்தேர்வில் 20 மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மே மாதம் 2016 -இல் பயிற்சி அளிக்கப்பட்டு சிறந்த நான்கு மாணாக்கர்களை இந்தியாவின் சார்பில் ஜப்பானில் நடைபெறும் பத்தாவது சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியார்டில் பங்கேற்க தேர்தெடுக்கப்படுவர். பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் 9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் கலந்து கொள்ளலாம். வயதானது 1.7.1997-க்கு பிறகு பிறந்திருக்க வேண்டும்.

தேர்விற்கான விண்ணப்பம் மற்றும் பாடத்திட்டம் ஆகியவற்றை www.geosocindia.org/index.php/ieso. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொண்டு ரூபாய் 50-ஐ (DD/Money order) வரைவோலை அல்லது பணவிடையாக முனைவர் இரா.வெங்கடாசலபதி, புவியமைப்பியல் துறை பேராசிரியர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11 என்ற பெயரில் எடுத்து 10.1.2016 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியார்டு ஆனது இந்திய புவி அறிவியல் கூட்டமைப்பு மற்றும் புவி அறிவியல் அமைச்சகத்தின் சார்பாக பள்ளி மாணாக்கர்களுக்காக வடகொரியா(2007), பிலிப்பைன்ஸ்(2008), தைவான்(2009), இந்தோனேசியா(2010), இத்தாலி(2011), அர்ஜென்டினா(2012), இந்தியா(2013), ஸ்பெயின்(2014), பிரேசில்(2015) ஆகிய நாடுகளில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தப் நுழைவுத் தேர்வானது கொள்குறி வகையில் (Objective Type) புவிஉருண்டை, வளிமணடலம், வானிலை, நிலநீர் பற்றி ஆங்கிலத்தில் கேட்கப்படும். மேலும் 21 நாள் பயிற்சியில் (2016 மே மாதம்), ஆய்வக களப்பணி மற்றும் கோள்கள் பற்றி விரிவுரை, விவாதம் நடைபெறும். இறுதியாக 20 மாணவ, மாணவியர்களுக்கு விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு 4 பேருக்கு ரொக்க பரிசுகள் வழங்கப்படும்.

தேர்வு கூடத்திற்கு வரும் போது பள்ளியில் படிப்பதற்கான அடையாள அட்டை கொண்டு வர வேண்டும். மேலும் தேர்வு கூடத்தில் கைபேசி அனுமதியில்லை.

மேலும் விவரங்களுக்கு முனைவர் இரா.வெங்கடாசலபதி புவியமைப்பியல் துறை பேராசிரியர், இயக்குநர்-வாழ்வியப் பணிவழிகாட்டி மற்றும் பணியமர்த்த மையம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11 அவர்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**